பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

18 09 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- 2027ஆம் ஆண்டில் இந்தியாவை உலகின் 3வது பெரிய பொருளாதார நாடாக திகழச் செய்வதை இலக்காகக் கொண்டு மத்திய அரசு பணியாற்றி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- நடப்பு நிதியாண்டின் முதல் 5 மாதங்களில் நாட்டின் ஏற்றுமதி 6 சதவீத வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- சத்தீஸ்கட் மாநிலம் நாராயண்பூர் மாவட்டத்தில் 12 மாவோயிஸ்ட்கள் சரணடைந்துள்ளதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.
- காஸா நகரில் பெரும் தாக்குதல் நடத்துவற்கு இஸ்ரேல் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
- ஆஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா ஏ அணி தமது முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 116 ரன் எடுத்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் ஆயிரத்து 723 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிய அவர், 2027ஆம் ஆண்டில் இந்தியாவை உலகின் 3வது பெரிய பொருளாதார நாடாக திகழச் செய்வதை இலக்காகக் கொண்டு மத்திய அரசு பணியாற்றி வருவதாக தெரிவித்தார்.

நாட்டை பொருளாதார ரீதியாக உயர்த்துவது முதல் ஏழைகளுக்கான வசதிகளை அளிப்பது வரை பிரதமர் மேற்கொள்ளும் முயற்சிகளை நாட்டு மக்கள் நீண்ட காலத்திற்கு நினைவில் கொள்வார்கள் என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டின் முதல் 5 மாதங்களில் நாட்டின் ஏற்றுமதி 6 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஆண்டு இறுதிக்குள் ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் என்று கூறினார்.

அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், நியூசிலாந்து, சிலி, பெரு, ஓமன் உள்ளிட்ட நாடுகளுடன் வர்த்தகப் பேச்சுகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா-ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே வர்த்தகம் தொடர்பான பேச்சுகள் மிக குறுகிய காலத்தில் நடைபெற்று தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பஞ்சாபில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மறுசீரமைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக மத்திய அரசு முழு ஆதரவளிக்கும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் உறுதியளித்துள்ளார்.

பதான்கோட் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

நிதியளிப்பதில் எந்த வரம்பும் கிடையாது என்றும், சேதம் ஏற்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

எதிர்காலத்தில் பாதிக்கப்படாத அளவில் மறுசீரமைப்புப் பணிகள் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார்.

சேதமடைந்த வீடுகளை மீண்டும் கட்டிக்கொடுப்பதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தேவைப்பட்டால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு மாற்று நிலம் வழங்கப்படும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

இதற்கிடையே பஞ்சாபில் மழை வெள்ளத்தால் 4 ஆயிரத்து 658 கிலோ மீட்டர் தொலைவிலான சாலைகளும், 68 பாலங்களும் சேதமடைந்துள்ளதாக பஞ்சாப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

சேத மதிப்பீடு குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், சேதமடைந்த பாலங்கள், சாலைகள் உள்ளிட்டவற்றை சீரமைக்க ஆயிரத்து 969 கோடி ரூபாய் தேவைப்படும் என்று திரு. ஹர்பஜன் சிங் கூறினார்.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் காவல்துறையினரால் மீட்கப்பட்ட ஆயிரத்து 559 மொபைல் ஃபோன்களை உரியவர்களிடம் துணைநிலை ஆளுநர் திரு. வினய்குமார் சக்சேனா ஒப்படைத்தார்.

அப்போது திருடப்பட்ட மொபைல் ஃபோன்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட காவல்துறையினர் 22 பேருக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தில்லி காவல்துறை ஆணையர், இந்த ஆண்டில் மட்டும் 6 ஆயிரத்து 432 மொபைல் ஃபோன்கள் மீட்கப்பட்டு அவற்றில் 3 ஆயிரத்து 589 மொபைல் ஃபோன்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<>>>>

நாட்டில் மொபைல் சேவையை விரிவுபடுத்த BSNL நிறுவனம் அஞ்சல் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இதன் மூலம் அஞ்சல்துறை சார்பில் நாடு முழுவதும் உள்ள ஒரு லட்சத்து 65 ஆயிரம் அஞ்சல் அலுவலகங்களில் BSNL சிம் கார்டுகள் விற்பனை செய்யப்பட உள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 2 மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டனர்.

அம்மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் மாவோயிஸ்ட்கள் பெரும் எண்ணிக்கையில் நடமாடுவதாக தகவல்கள் கிடைத்ததையடுத்து, பாதுகாப்புப் படையினர் அந்த இடங்களில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 2 மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டதாகவும், சம்பவ இடத்தில் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் மாவட்ட ரிசர்வ் காவல்படையைச் சேர்ந்த 2 பேர் காயமடைந்ததாகவும் கூறியுள்ளனர்.

இதற்கிடையே நாராயண்பூர் மாவட்டத்தில் 12 மாவோயிஸ்ட்கள் சரணடைந்ததாகவும், அவர்களில் 9 பேர் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு மொத்தம் 18 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ராபின்சன் குரியா தெரிவித்தார்.

சுக்மா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 4 மாவோயிஸ்ட்கள் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ரசாயன உரங்களின் பயன்பாட்டால் சீரழிந்துள்ள மண் வளத்தை மீட்டெடுக்கும் வகையில் மத்திய அரசின் சார்பில் கிசான் சங்கோஸ்தி எனப்படும் விவசாயிகள் கருத்தரங்கு, நாடு முழுவதும் மத்திய அரசு சார்பில் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் இந்த கருத்தரங்கு நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் வேளாண் பொருட்கள் மீதான வரி குறைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழகத்தில் வேலூர் மாவட்டத்தில் சுமார் 45 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த வரி குறைப்பு மூலம் வேளாண் பணிக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களின் விலை குறையும் என்பதால் அது தங்குள்கு மிகுந்த பயனளிக்கும் என்று விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

மொசாம்பிக்கில் அந்நாட்டு கடற்படையினருடன் இணைந்து இந்திய கடற்படை கூட்டுப் பயிற்சி மேற்கொள்ள உள்ளது.

இதற்காக இந்திய கடற்படையினர் மொசாம்பிக்கின் Maputo துறைமுகத்தை நேற்று முன்தினம் சென்றடைந்ததாக பாதுகாப்பு அமைச்சம் தெரிவித்துள்ளது.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் நீர்மூழ்கி பயிற்சி நடவடிக்கைகள், தீயணைப்பு உள்ளிட்ட பயிற்சிகளை இந்திய கடற்படையினர் மொசாம்பிக் கடற்படையினருடன் இணைந்து மேற்கொள்ள உள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

காஸா நகரில் பெரும் தாக்குதல் நடத்துவற்கு இஸ்ரேல் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நகர்ப்புறப் பகுதியில் தாக்குதலை நடத்துவதற்காக பீரங்கிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நடவடிக்கைக்கு முன்பாக காஸா நகரை விட்டு பாலஸ்தீனர்கள் வெளியேறுவதற்கான வழித்தடம் மேலும் 48 மணி நேரத்திற்கு திறந்திருக்கும் என்று இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கானோர் காஸாவில் தங்கியிருப்பதாகவும், பலர் அங்கிருந்து வெளியேற தயக்கம் காட்டி வருவதாகவும் கூறப்படுகிறது.

காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா ஏ அணி தமது முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 116 ரன் எடுத்துள்ளது.

லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நாராயண் ஜெகதீசன் 50 ரன்னுடனும், சுதர்சன் 20 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

முன்னதாக ஆஸ்திரேலியா ஏ அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 532 ரன் எடுத்திருந்தபோது ஆட்டத்தை டிக்ளர் செய்தது.

<<<<>>>>